
மூத்த திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் – பழம்பெரும் நடிகை திருமதி எம்.என். ராஜம் ஆகியோருக்கு

# கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் மூத்த திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் அவர்களுக்கு 2025ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினையும் பழம்பெரும் நடிகை திருமதி. எம் என் ராஜம் அவர்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினையும் வழங்கி சிறப்பித்தார்.

சென்னை, பிப்.18-

**பழம்பெரும் நடிகை திருமதி எம்.என். ராஜம் அவர்களுக்கு 2024-ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதும், மூத்த திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் அவர்களுக்கு 2025ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதும் வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் பழம்பெரும் நடிகை திருமதி. எம். என். ராஜம் அவர்களுக்கு 2024-ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினையும், மூத்த திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் அவர்களுக்கு 2025-ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினையும் வழங்கி சிறப்பித்தார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் பெயரில் **"கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது"** ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் என்றும், தேர்ந்தெடுக்கப்படும் விருதாளர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, 2022-ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது திரைப்படத் துறையில் சுமார் 500 திரைப் படங்களுக்கு மேல் கதை, திரைக்கதை, வசனம் எழுதிப் புகழ்பெற்ற ஆரூர்தாஸ் அவர்களுக்கும்;

2023-ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது தமிழ்ப் பேராசிரியரும், புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்தவரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும்;

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாக 2023ஆம் ஆண்டுக்கு மட்டும் கூடுதலாக கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது "தென்னிந்தியாவின் இசைக்குயில்" என்றும், "மெல்லிசை அரசி" என்றும் பாராட்டப்பட்டவருமான திரைப்படப் பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

**பழம்பெரும் நடிகை திருமதி.எம்.என்.ராஜம் அவர்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது**

தமிழ் திரையுலகின் பழம்பெரும் நடிகைகளில் ஒருவரான நடிகை எம்.என். ராஜம் அவர்கள், சிறு வயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கி, 1949இல் குழந்தை நட்சத்திரமாக திரைப்படங் களில் அறிமுகமானவர். 1950கள் மற்றும் 1960களில் முன்னணி நாயகியாக விளங்கினார். ரத்தக்கண்ணீர், பெண்ணின் பெருமை, புதையல், தங்கப்பதுமை, நாடோடி மன்னன், பாசமலர், தாலி பாக்கியம், மங்கையர் திலகம் போன்ற பல்வேறு வெற்றிப்படங்களில் நடித்து ரசிகர்களின் அன்பைப் பெற்றார். 200க்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்து மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர்.

இத்தகைய பெருமைக்குரிய பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினை வழங்கி சிறப்பித்தார்.

**முதுபெரும் திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் 2025ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது**

எஸ்.பி.முத்துராமன் அவர்கள் தமிழ்த் திரைப் படத் துறையின் மூத்த இயக்குநர்களில் ஒருவராவார். 1960இல் களத்தூர் கண்ணம்மா படத்தில் உதவி இயக்குநராக தனது திரைத்துறை பணியை தொடங்கி, பின்னர் 1970கள் முதல் 1990கள் வரை தமிழ் சினிமாவில் மிகவும் வெற்றிகரமான இயக்குநராக உயர்ந்தார். இவர் 70க்கும் மேற்பட்ட தமிழ்ப் படங்களை இயக்கியுள்ளார். தமிழ் சினிமாவின் பல வெற்றிகரமான திரைப்படங்களை இயக்கி மிக முக்கிய இயக்குநர்களில் ஒருவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் அவர்கள் திரைப்படத்துறைக்கு ஆற்றிய சிறந்த பங்களிப்பை பாராட்டி முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அவருக்கு 2025ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினை வழங்கி சிறப்பித்தார்.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது பெற்ற பழம்பெரும் நடிகை திருமதி. எம்.என்.ராஜம் மற்றும் திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் ஆகியோருக்கு விருதுடன் ரொக்கப் பரிசாக தலா 10 இலட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது பெற்ற பழம்பெரும் நடிகை திருமதி.எம்.என்.ராஜம் மற்றும் திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் ஆகியோரது குடும்பத்தினர் விருதுகள் வழங்கி சிறப்பித்தமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், திருமதி.எம்.என்.ராஜம் மற்றும் எஸ்.பி. முத்துராமன் ஆகியோரது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.2.2026) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 2025–2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் அரசு செயலாளர் / மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் (மு கூ பொ) சஜ்ஜன் சிங் ரா சவான், மற்றும் நிதித்துறை துணை செயலாளர் சி.ஏ. ரிஷப், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட

# 2025-2026ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, பிப்.18-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.2.2026) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 2025-2026ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டார்.**

தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2025-26, கடந்த ஐந்து ஆண்டிற்கான மாநிலத்தின் பொருளாதாரத்தின் வளர்ச்சிப் பாதையை எடுத்துரைக்கிறது. இவ்வறிக்கை 10 அத்தியாயங்களில் பொருளாதாரத்தின் பல்வேறு முக்கிய அம்சங்கள் மற்றும் அவை எவ்வாறு செயல்பட்டது என்பதை விரிவாக விளக்குகிறது.

இவ்வறிக்கையானது, நம் மாநிலத்தின் பொருளாதார செயல்பாடுகளை விளக்குவதுடன், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு இணையான தனிநபர் வருமானம் ஆகிய இரு இலக்குகளையும் அடைய கவனிக்க வேண்டிய பகுதிகளையும் சுட்டிக்காட்டுகிறது.

இந்த தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை, கொள்கை வகுப்பாளர்கள், வணிகம், தொழில்வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு முக்கியமான தகவல்களை வழங்குகிறது. பொருளாதார போக்குகளை ஆவணப்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டின் எதிர்கால மேம்பாட்டு உத்திகளை வடிவமைப்பதற்கும், சான்றுகள் அடிப்படையிலான கொள்கை முடிவுகளை வலுப்படுத்துவதற்கும் முக்கியமான கருவியாக செயல்படும்.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் அரசு செயலாளர்/மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் (மு கூ பொ) சஜ்ஜன் சிங் ரா சவான், மற்றும் நிதித்துறை துணை செயலாளர் சி.ஏ. ரிஷப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (16.02.2026) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக ரூ.1.52 கோடி மதிப்பீட்டில் சேலம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆய்வக கட்டடத்தினை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் சேலம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

மதுரை தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை அமைந்துள்ள

# 1.3 கி.மீ. - பாலத்திற்கு - 'நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்' பெயர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெயர் சூட்டி பெருமிதம்! 21–ஆம் தேதி திறந்து வைக்கிறார்!

சென்னை, பிப்.18-

மதுரை தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு "நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்" எனப் பெயர் சூட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**நீண்ட பாலங்களை அமைத்துச் சாதனை படைத்துவரும் நமது திராவிட மாடல்இல், அடுத்து மதுரையில் அமைகிறது 1.3 கிலோமீட்டர் நீளமுள்ள "நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்"! தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு, இந்திய நாட்டின் விடுதலைக்காகத் தனக்கெனப் பாதையை உருவாக்கி, நம் தென் மாவட்ட மக்களை விடுதலைப் போரில் ஈடுபடுத்திய வீரத்தின் அடையாளமான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பெயரைச் சூட்டிப் பெருமிதம் கொள்கிறேன். ரூ.213 கோடியில் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலத்தை வரும் 21ஆம் நாள் என்னுடைய மதுரைப் பயணத்தில் திறந்து வைக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

'இந்தியா கூட்டணி'யை ஒருங்கிணைக்கக் கூடியவர்!

# காமராஜரைப் போலவே 'கிங் மேக்கர்' மு.க.ஸ்டாலின்!

## காங்கிரஸ் மூத்த தலைவர் மணி சங்கர் அய்யர் பேட்டி!

திருவனந்தபுரம் பிப். 18-

இந்தியா கூட்டணியை "ஒருங்கிணைக்க" சிறந்த மனிதர் தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் என்று முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர் தெரிவித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேவையின்றி பேசுவதை விட முக்கியமான பிரச்சினைகளை எழுப்புவதில் கவனம் செலுத்துகிறார் என்றும், ராகுல் காந்தி பிரதமராவதற்கு அவர் உதவியாக இருப்பார் என்றும் அவர் குறிப்பிட்டார்.



பிரதமர் மன்மோகன் சிங்கின் கீழ் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA I) அரசாங்கத்தில் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சராகப் பணியாற்றிய அய்யர், ANI செய்தி நிறுவனத்திடம் பேசுகையில், "கடந்த ஒரு வருடமாக மு.க. ஸ்டாலின் செய்தது இந்தியாவில் கூட்டாட்சிக்கு பொருத்தமான ஒவ்வொரு விஷயத்தையும் எழுப்புவதாகும்" என்றார்.

'அவர் ஒருபோதும் 'சூட்பூட் கி சர்க்கார்' என்று சொல்லவில்லை. அவர் ஒருபோதும் 'சவுகிதார் சோர் ஹை' என்று சொல்லவில்லை. ... ராகுல் காந்தி பிரதமராக வருவதற்கு அவர் தடையாக இருக்க மாட்டார் என்ற மிகப்பெரிய நற்பண்பு அவருக்கு உண்டு," என்று அய்யர் கூறினார்.

மேலும், ஜவஹர்லால் நேருவுக்குப் பிறகு பிரதமர் பதவியை மறுத்த முன்னாள் காங்கிரஸ் தலைவர் பெருந்தலைவர் காமராஜுக்கும் ஸ்டாலினுக்கும் இடையே ஒரு வரலாற்று இணையை அய்யர் எடுத்துரைத்தார்.

பாத்திரங்கள் தனிப்பட்ட லட்சியங்களை விட ஒற்றுமைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். முன்னாள் காங்கிரஸ் பெருந்தலைவர் காமராஜைப் போலவே ஸ்டாலின் ஒரு கிங்மேக்கர் பாத்திரத்தை வகிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

'இந்தியா' கூட்டணி ஒருங்கிணைக்கப்பட்டால், அதை ஒருங்கிணைக்க சிறந்த மனிதர் மு.க.ஸ்டாலின்தான் என்று நான் நினைக்கிறேன்.

இவ்வாறு மணிசங்கர் ஐயர் தெரிவித்தார்.



கரூர் மாவட்டம் பரமத்தி ஊராட்சி ஒன்றியம் குப்பம் வேலாயுதம் பாளையத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட குடியிருப்புகளின் சாவியை பயனாளிகளுக்கு கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார். அருகில் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.